# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்
## மானியக் கோரிக்கை எண்–3
## சிறைச்சாலைகள்
## மானியக் கோரிக்கை எண்–24

# அறிவிப்புகள்
# 2016–2017

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

## அறிவிப்புகள்

### 1. சென்னை எழும்பூர் நீதிமன்றக் கட்டடத்தில் கூடுதலாக மூன்று தளங்கள் கட்டுதல்

### Construction of additional three floors over Egmore Court Building

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு தளத்துடன் கூடிய நீதிமன்றக் கட்டடத்தில் கூடுதலாக மூன்று தளங்கள் ரூ.**869.00** இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 2. சைதாப்பேட்டை பெருநகர குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டடம் கட்டுதல்

## Construction of building for Metropolitan Magistrate Court at Saidapet

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை சைதாப்பேட்டையிலுள்ள பெருநகர குற்றவியல் நீதிமன்றத்திற்கு புதியதாக கட்டடம் ரூ.**635.80** இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 3. சாத்தான்குளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்

## Construction of Combined Court Buildings and Quarters at Sathankulam

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கான குடியிருப்புகள் ரூ.**555.28** இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 4. சென்னை உயர்நீதிமன்ற பிரதான கட்டடத்தில் வசதிகள் செய்தல்

## Provision of facilities in the existing Main building of the High Court of Madras

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை உயர்நீதிமன்றத்திற்கு கூடுதலாக வழங்கப்பட்ட 15 நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக சென்னை உயர்நீதிமன்ற பிரதான கட்டடத்திலுள்ள பதிவுரு ஆவண வைப்பறை, பிரிவு அலுவலகங்கள் மற்றும் சட்ட அலுவலகங்கள் ஆகியவை மாற்றியமைக்கப்பட்டு கூடுதலாக 12 நீதிமன்ற அறைகள் மற்றும் 9 நீதிபதிகளுக்கான அறைகள் ரூ.537.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 5. நீதித்துறை பயிற்சிக் கழகக் கட்டடத்தில் விருந்தினர் அறைகள் கட்டுதல்

## Construction of Guest rooms in Judicial Academy Building

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகக் கட்டடத்தின் 3–வது தளத்தில் 12 விருந்தினர் அறைகள் ரூ.388.60 இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 6. சென்னை உயர்நீதிமன்ற விருந்தினர் மாளிகையில் மின்தூக்கி வசதி மற்றும் கூடுதல் தளங்கள் கட்டுதல்

Provision of lift facilities and additional floors in the High Court Guest House, Chennai

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை அடையாறிலுள்ள தமிழ்நாடு நீதித்துறை பயிற்சிக் கழக வளாகத்திலுள்ள உயர்நீதிமன்ற விருந்தினர் மாளிகையில் மின்தூக்கி வசதி மற்றும் கூடுதலாக இரண்டு தளங்களையுடைய கட்டடம் ரூ.**284.30** இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 7. உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் அமைத்தல்

## Constitution of Sub Court at Ulundurpet

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் ரூ.125.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 8. சென்னை உயர்நீதிமன்றத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலகத்திற்கு வசதிகள் செய்தல்

## Provision of facilities to the newly constructed Office in the High Court of Madras

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் அலுவலக கட்டடத்தில் மூன்றாவது தளத்தில் கழிவறை மற்றும் பிற வசதிகள் ரூ.100.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

## 9. காங்கேயத்தில் சார்பு நீதிமன்றம் அமைத்தல்

## Constitution of Sub Court at Kangeyam

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் சார்பு நீதிமன்றம் ரூ.84.78 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 10. ஆலந்தூரில் சார்பு நீதிமன்றம் அமைத்தல்
## Constitution of Sub Court at Alandur

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூரில் சார்பு நீதிமன்றம் ரூ.**83.93** இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 11. பாலின விழிப்புணர்வு மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்துதல்

## Implementation of Regulations pertaining to the Gender Sensitisation and sexual harassment of women

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** "சென்னை உயர்நீதிமன்ற முதன்மை அமர்வு மற்றும் மதுரைக்கிளையில், பாலின விழிப்புணர்வு மற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் குறைதீர்வு) ஒழுங்குமுறைகள், **2013**"–யினை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக்கிளையில் செயல்படுத்துவதற்கு பணியாளர் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.**68.42** இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

## 12. மாற்று தீர்வு மையக் கட்டடத்தில் வசதிகளை ஏற்படுத்துதல்

## Provision of facilities in the Alternative Dispute Resolution Building

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள மாற்று தீர்வு மையக் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் இயங்கும் மாநகர உரிமையியல் நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் சமரச தீர்வு மையங்கள் திறம்பட செயல்படுவதற்கு ஏதுவாக 16 தடுப்பு அறைகள் ரூ.51.90 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 13. கணினி, லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் யூபிஎஸ் உபகரணங்களை வழங்குதல்

## Provision of Desktops, Laser Printers and UPS

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் இல்ல அலுவலகங்களுக்கு கணினி, லேசர் அச்சுப் பொறிகள் மற்றும் யூபிஎஸ் உபகரணங்கள் ரூ.44.00 இலட்சம் செலவில் புதியதாக வழங்கப்படும்.

## 14. சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு 'சிஸ்கோ' மின்விசை மாற்றுக் குமிழ்கள் வழங்குதல்

## Procurement of CISCO Switches for High Court of Madras

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு 'சிஸ்கோ' மின்விசை மாற்றுக் குமிழ்கள் ரூ.40.18 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 15. இந்திய அரசின் உதவி சட்ட ஆலோசகருக்கு அலுவலகம் கட்டுதல்

## Construction of Office building for Assistant Solicitor General of India

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இந்திய அரசின் உதவி சட்ட ஆலோசகருக்கு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் அலுவலகத்துடன் கூடிய அறைகள் ரூ.22.99 இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 16. உயர்நீதிமன்ற பதிவாளர்களுக்கு புதிய ஹோண்டா சிட்டி மகிழுந்துகள் வழங்குதல்

## Purchase of new Honda City Cars for Registrars of High Court

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை உயர்நீதிமன்றத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பதிவாளர் (மாவட்ட நீதி நிர்வாகம்) மற்றும் பதிவாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் புள்ளி விவரம்) ஆகியோருக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய இரண்டு புதிய ஹோண்டா சிட்டி மகிழுந்துகள் ரூ.19.09 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 17. குடும்ப நல நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் வழங்குதல்

## Provision of furniture for Family Courts

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னையில் செயல்பட்டு வரும் குடும்ப நல நீதிமன்றங்களுக்கு ரூ.**18.53** இலட்சம் செலவில் அறைகலன்கள் வழங்கப்படும்.

## 18. குறும்பரப்பு வலையமைப்பு வசதிகள் அமைத்தல்

## Provision of Local Area Network (LAN)

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** திருச்சிராப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களில் குறும்பரப்பு வலையமைப்பு வசதிகள் ரூ.**15.85** இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 19. பொது மின்சேவை தொடர்புகளுக்கு மின்கட்டணம் செலுத்துதல்

## Payment of Electricity Charges for Common Service Connections

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்பு கட்டடத்தில் அமைந்துள்ள **29** பொது மின்சேவை தொடர்புகளுக்கு ரூ.**15.43** இலட்சம் மின்கட்டணம் செலுத்தப்படும்.

# சிறைத்துறை

## அறிவிப்புகள்

**1. சிறைத் தொழிற்கூடங்களுக்கு புதிய இயந்திரங்கள் வாங்குதல் மற்றும் இயங்கிவரும் இயந்திரங்களைப் பராமரித்தல்**

**Purchase of new machineries and maintenance of existing machineries**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சிறைசெய் பொருட்களை காவல்துறை உள்ளிட்ட அரசுத் துறைகளுக்கு தங்குதடையின்றி வழங்கும் பொருட்டு சிறைத் தொழிற்கூடங்களுக்கு புதிய இயந்திரங்கள் வாங்குதல் மற்றும் இயங்கிவரும் இயந்திரங்களைப் பராமரித்தலுக்காக ரூ.200.00 இலட்சம் வழங்கப்படும்.

## 2. வாக்கி–டாக்கி கருவிகள் வாங்குதல்
## Purchase of Walkie-Talkie sets

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சிறைச்சாலைகளின் பாதுகாப்பினைக் கருதி, புதியதாக 380 வாக்கி–டாக்கி கருவிகள் உபரி மின்கலத்துடன் வாங்குவதற்கு ரூ.80.00 இலட்சம் வழங்கப்படும்.

## 3. சிறைத்துறைத் துணைத் தலைவருக்கு குடியிருப்பு கட்டுதல்

## Construction of Residential Quarter for D.I.G of Prisons

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவருக்கு, புழல் மத்திய சிறை வளாகத்தில் குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.50.00 இலட்சம் வழங்கப்படும்.

## 4. கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் யு.பி.எஸ். உபகரணங்களை வாங்குதல்

## Purchase of Computers, Laser Printers and UPS

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** சிறைத்துறை தலைமை அலுவலகம், 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு 80 கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் யு.பி.எஸ். உபகரணங்களை வாங்குவதற்கு ரூ.47.48 இலட்சம் வழங்கப்படும்.

## 5. எடுத்துச் செல்லத்தக்க மின்னாக்கி இயந்திரங்கள் வழங்குதல்

## Provision of Portable Generator sets

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறைகளின் பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்லத்தக்க மின்னாக்கி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று, கிளைச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகளுக்கும் எடுத்துச் செல்லத்தக்க மின்னாக்கி இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ.41.70 இலட்சம் வழங்கப்படும்.

## 6. சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தினை உயர்த்தி வழங்குதல்

## Enhancement of Feeding charges to Prison Personnel

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அவசர காலத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தினை உயர்த்தி வழங்குவதற்கு ரூ.14.73 இலட்சம் வழங்கப்படும்.

## 7. நெசவுக் கூடத்திலுள்ள அளவிடல் இயந்திரங்கள் மேம்படுத்துதல்

## Upgradation of existing textile sizing machines

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** கோயம்புத்தூர் மத்திய சிறையின் நெசவுக் கூடத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட அளவிடல் இயந்திரங்கள் ரூ.9.87 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

## 8. தையல் தொழிற்கூடங்களை விரிவு படுத்துதல்

## Expansion of Tailoring Units

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மத்திய சிறைகளில் உள்ள தையல் தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படும் காவல்துறைக்குத் தேவையான பல்வேறு தொப்பிகளுக்கான வழங்கல் ஆணைகள் உற்பத்தி அளவிற்கும் கூடுதலாக இருப்பதால் தையல் தொழிற்கூடங்களை விரிவுபடுத்திட ரூ.**6.22** இலட்சம் வழங்கப்படும்.

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்